RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 108 | ஏப்ரல்.25 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# திமுக வேட்பாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் சந்திப்பு

சென்னை: ஏப்.25-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நேற்று விறுவிறுப்பாக நடந்து முடிந்திருக்கும் நிலையில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களின் திமுக வேட்பாளர்களுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின்போது முதல்வர் அவர்களிடம், தேர்தல் களம் குறித்து கேட்டறிந்ததாகத் தெரிகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் நேற்று ஒரே கட்டமாக நடைபெற்றது. தமிழகத்தில் இளைஞர்கள், பெண்கள் ஆர்வத்துடன் திரண்டு வாக்களித்ததால், வாக்குப்பதிவு 85 சதவீதத்தை தாண்டியுள்ளது. தமிழகத்தில் நான்கு முனைப்போட்டி நிலவுவதால், தேர்தல் களம் சற்று பரபரப்பாக காணப்படுகிறது.

இந்நிலையில், தேர்தல் நேற்று விறுவிறுப்பாக நடந்து முடிந்திருக்கும் நிலையில், தேர்தலில் போட்டியிட்ட சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு கழக வேட்பாளர்கள் மற்றும் அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி கழக வேட்பாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்தனர்.



அண்ணா அறிவாலயத்தில் நடந்த இச்சந்திப்பில் தேர்தல் கள நிலவரம் தொடர்பாக முதல்வர் ஆலோசனை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. அப்போது, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தார்.

முதல்வர் ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர் தொகுதியில் 85.63 சதவீதம், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி போட்டியிடும் எடப்பாடி தொகுதியில் 91.94 சதவீதம், தவெக தலைவர் விஜய் போட்டியிடும் பெரம்பூர் தொகுதியில் 89.15 சதவீதம், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிடும் காரைக்குடி தொகுதியில் 73.94 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பது குறிப்பிடத்தகக்து.

## “ஏளனம் பேசியோருக்கு செயல் மூலம் தவெகவினர் பதிலடி” : விஜய் பெருமிதம்

சென்னை: ஏப்.25-

“அரசியல் மாயாஜாலக் கணக்குகள் சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான்” என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மேலும், ‘இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும், எப்படித் தாக்குப் பிடிப்பார்கள்’ என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் தவெகவினர் பதிலடி தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “அரசியல் என்பது ஏதோ அசகாய சூரர்களுக்கானது மட்டுமே. அதீத அனுபவசாலிகளுக்கானது மட்டுமே. பதவிகளை அனுபவிப்பவர் களுக்கானது மட்டுமே. இப்படி அரசியலை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் வைத்தவர்களின் மாயாஜாலக் கணக்குகள், சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன.

அரசியலைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள் என்று இதுவரை அனுமானிக்கப்பட்ட இளைஞர்களும் பெண்களும் அரசியல் பேசத் தொடங்கிய அதிசயமும் அவசியமும் நிகழத் தொடங்கிவிட்டது. இது எப்போது இருந்து தொடங்கியதென நடுநிலை மனம்கொண்டோர் அனைவரும் உணர்வர்.

இதுவரை பெருமளவிலான குறிப்பிட்ட சதவீத வாக்குகள், வாக்குச்சாவடி பக்கமே வராமல் இருந்தன. ஆனால், 2026ஆம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு, தமிழகத் தேர்தல் அரசியல் வரலாற்றில் சிகரமான வரலாற்று நிகழ்வாகப் பதிவாகி உள்ளது. 85% வாக்குப்பதிவு என்பதெல்லாம் இதுவரை தமிழ்நாடு காணாத ஒன்று.

வாக்குச்சாவடிகள் எங்கும் கோவில்களில் காணப்படும் கூட்டம்போல, குடும்பம் குடும்பமாகக் குழந்தை குட்டிகளுடன் வந்து வாக்களித்ததைக் கண்டு வியக்காதோர் எவரும் இருக்கவே வாய்ப்பில்லை.



அது மட்டுமா? வெளிமாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வாக்களிப்பதற்காகவே பெரும்பொருள் செலவு செய்து வந்த ஜனநாயகர்களை இருகரம் கூப்பி வணங்காமல் இருக்க முடியுமா?

தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான். இந்த 2026 ஏப்ரல் 23 தான். எனினும் இது ஒரு தொடக்கம் மட்டுமே.

தமிழகத் தேர்தல் அரசியலை அர்த்தப்படுத்திய தமிழ்நாட்டு மக்களாகிய, என் பாட்டி, அம்மா, அக்கா, தங்கைகள், என் தாத்தா, அப்பா, அண்ணன், தம்பிகள், என் குடும்ப உறவுகள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியறிதலைக் காணிக்கையாக்குகிறேன்.

குறிப்பாக, நம் குடும்பத்தினரை வழிநடத்திய என் குட்டி நண்பா நண்பீஸ்ஊக்கு என்னுடைய உங்கள் விஜய் மாமாவின் ஸ்பெஷல் வணக்கமும் நன்றியும். குறிப்பாக, நான் நன்றி செலுத்த வேண்டியது, நம் வாக்குச்சாவடி முகவர்களுக்கும், நம் கட்சித் தோழர்களுக்கும் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும்தான்.

இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும்? எப்படித் தாக்குப் பிடிப்பார்கள் என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் பதிலடி தந்த கட்சித் தோழர்களேஞ் உங்களுக்கு என் மனம்நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும். கட்சித் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினருக்கும் நன்றி” என்று விஜய் தெரிவித்துள்ளார்.

## ஈரான் மீது அணுஆயுத தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமா? டிரம்ப் பதில்

வாஷிங்டன், ஏப்.25-

ஈரானுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்தப் போவது இல்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். அணு ஆயுதங்களை எந்த ஒரு நாடும் பயன்படுத்தக்கூடாது; சாதாரண ஆயுதங்களை கொண்டே ஈரானின் கடற்படை மற்றும் விமானப்படைகளை அமெரிக்கா ஏற்கனவே அழித்துவிட்டது. ஈரான் மீண்டும் ஆயுதங்களை திரட்ட முயன்றாலும், அவற்றை ஒரே நாளில் அழிக்கும் திறன் அமெரிக்காவிடம் உள்ளது என்றும் கூறிய டிரம்ப், அமைதிப் பேச்சுவார்த்தையில் அவசரம் காட்டப் போவது இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சிப்பதாக கூறி கடந்த பிப்ரவரி 28 ஆம் தேதி அந்த நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. ஒரு



மாதத்திற்கும் மேலாக இரு நாடுகளுக்கும் இடையே போர் நடைபெற்ற நிலையில், பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்ததன் பேரில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டது. ஈரான் அமெரிக்கா இடையே நடைபெற்ற முதல் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்த நிலையில், விரைவில் இரண்டாவது கட்ட அமைதி பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான முயற்சிகள் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழகத்தில் வரலாறு காணாத வாக்குப்பதிவு சொல்லும் ‘சேதி’ என்ன?

சென்னை, ஏப்.25-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பரபரப்புகள் வாக்குப் பதிவோடு ஓய்ந்துவிட்டவில்லை. தமிழகத்தில் பதிவான வாக்கு சதவீதம் அந்த பரபரப்பை சற்றும் குறைந்துவிடாமல் மே 4 வரை நீட்டிக்கும் போல் தெரிகிறது.

இந்த வரலாற்று வாக்குப் பதிவு சதவீதத்தின் பின்னணியில் எஸ்ஆர்ஐ பணிகள், ஜனநாயகக் கடமையாற்றுவதில் இளைஞர்களுக்கு ஏற்பட்ட ஆர்வம், மகளிர் சார்ந்த பல்வேறு அறிவிப்புகளால் பெண்கள் ஆர்வத்துடன் வாக்களித்தது என்று 3 காரணங்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

எஸ்ஐஆர் தாக்கம்:

தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்கு பிறகு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (ஷிமிஸி) கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெற்றது. இதில் இறந்தவர்கள் 26.94 லட்சம் பேர், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்குரிமை உள்ள 3.98 லட்சம் பேர், முகவரியில் இல்லாதவர்கள் 66.44 லட்சம் பேர் என மொத்தம் 97.37 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.

பின்னர், சுமார் 24 லட்சம் வாக்காளர்கள் மட்டுமே மீண்டும் விண்ணப்பித்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தனர். சுமார் 69 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.

இந்த நிலையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்கு சதவீதம் உயர்ந்துள்ளது. 2011ம் ஆண்டு தேர்தலில் அதிகபட்சமாக 78 சதவீத வாக்குகள் பதிவாகிய நிலையில், எஸ்ஐஆர்க்கு பிறகு தற்போது தமிழகத்தில் வாக்குப்பதிவு 85.15% பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக கரூர் மாவட்டத்தில் 92.36 சதவீதம் பதிவானது. குறைந்தபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 75.61 சதவீதமும் சென்னை மாவட்டத்தில் 83.74 சதவீதமும் பதிவானது.

இந்த வாக்கு சதவீதங்களே மிகத் தெளிவாக இது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (SIR) எதிரொலி என்பதை உறுதி செய்கிறது. இந்தப் பணிகள் நடந்தபோதே வாக்கு சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எஸ்ஐஆர் என்பது வாக்காளர் பட்டியலை தூய்மைப்படுத்தும் பணி என்றே மத்திய அரசு ஆரம்பத்தில் கூறிவருகிறது. போலி வாக்காளர்கள் நீக்கம், டுப்ளிகேஷன் களையப்பட்டதன் காரணமாக மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து வாக்குப் பதிவு சதவீதம் விகிதாச்சாரப்படி அதிகரித்ததாகக் கருதப்படுகிறது.

தமிழகம் மட்டுமல்லாது இதற்கு முன்னர் தேர்தலை எதிர்கொண்ட பிஹார் மற்றும் இப்போது தமிழகத்தோடு தேர்தலை சந்தித்த மேற்கு வங்கத்திலும் வாக்கு சதவீதம் அதிகரித்திருப்பதை சான்றாகக் கூறலாம்.

இளைஞர்களின் எழுச்சி:

இரண்டாவதாக ஜனநாயகக் கடமையாற்றுவதில் இளைஞர்களின் எழுச்சி காரணமாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்ற வாக்காளர்கள் 5.73 கோடி. இதில், சுமார் 1 கோடியே 18 லட்சம் இளம் வாக்காளர்கள் இந்தத் தேர்தலில்



வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். இது மொத்த வாக்காளர்களில் சுமார் 20 சதவீதம். இளம் வாக்காளர்களில் 14.6 லட்சம் முதன்முறை வாக்காளர்கள்.

இந்த முறை களத்தில் தவெக என்ற புதிய கட்சி களம் கண்டது, இளம் தலைமுறை வாக்காளர்களை அதுவும் குறிப்பாக அரசியல் அறிவே அற்ற வாக்காளர்களைக் கூட வாக்களிக்க வைத்துள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

விஜய்க்கு வாக்களித்த பலரும் அவரது படத்துக்கு ஃபர்ஸ்ட் டே ஃபர்ஸ்ட் ஷோ செல்வது போன்ற கொண்டாட்ட மனநிலையிலும், ’எனக்கு வாக்குரிமை இருக்கிறது, அதைச் செலுத்த முழுக்க அரசியல்வாதியாக இல்லாத சினிமா கம் அரசியல் அந்தஸ்தை தரித்துக் கொண்ட விஜய் இருக்கிறார், எனக்குப் பிடித்த உச்ச நடிகர் அரசியலில் களம் இறங்கியிருக்கிறார், அவரை ஆதரிப்பேன், எனக்குப் பிடித்த நடிகர் அவரது கரியர் உச்சத்தை உதறிவிட்டு அரசியலுக்கு வந்திருக்கிறார், அவரை அரசியலில் வெற்றி பெற வைப்பது எனது கடமை’ போன்ற உணர்வுகளாலேயே அந்தக் கட்சிக்காக வாக்களித்துள்ளனர் என்று தேர்ந்த அரசியல் நோக்கர்கள் கணிக்கின்றனர்.

மேலும், விஜய் தன்னை எம்ஜிஆருக்கு நிகராக நிலைநிறுத்தி, நான் அதேபோன்ற கவர்ச்சியை கொண்டிருக்கிறேன், 1977 புரட்சியை ரீரைட் செய்வேன் என்று வசனம் பேசியதால், அதிமுக அதிருப்தி இளம் வாக்காளர்களின் வாக்குகளைக் கணிசமாகப் பிரித்திருக்கலாம் என்றும், திமுகவை அவர் தொடர்ச்சியாக வலுவாக தீவிரமாகத் தாக்கிவந்ததால் திமுக மீதான அபிமானத்தை இழந்த இளைஞர்களையும் தன் பக்கம் ஈர்த்திருக்கிலாம் எனக் கூறப்படுகிறது.

நாதக வாக்குகள் கணிசமாக விஜய்க்கு போகும் என்று ஏற்கெனவே கணிக்கப்பட்ட நிலையில், தமிழகத்தில் நிலவிய 4 முனைப் போட்டியில் விஜய் ஒருவராக மூன்று கட்சிகளின் மீதும் வாளைச் சுழற்றி வாக்குகளை சின்னாபின்னமாக சிதறடித்திருப்பார் என்பதே இப்போதைய கணிப்பாக இருக்கிறது.

குடும்ப அரசியல், வாரிசு அரசியல் என்ற விமர்சனங்கள் இருந்தாலும்கூட உதயநிதியை கடந்த சட்டப்பேரவைத் தேர்தலிலேயே திமுக வளர்த்தெடுத்துவிட்டது. அவரும் சினிமாவுக்கு முழுக்குப் போட்டுவிட்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு வருகிறார். துணை முதல்வராக அவர் இந்தமுறை பிரச்சாரம் செய்தது திமுக பக்கம் கணிசமாக இளைஞர்களை ஈர்த்திருக்கலாம். இன்னொரு புறம் வாரிசு அடையாளமே அதிருப்தி இளைஞர்களை தவெக பக்கம் தள்ளியிருக்கலாம் என்று கணிக்கின்றனர்.

ஆனால், அதிமுக இதுவரை இரண்டாம் கட்ட இளம் முகங்களை வளர்த்தெடுக்கவில்லை. ஜெயலலிதா காலத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் பலரே இந்த முறையும் வேட்பாளர்களாக இருந்துள்ளனர். விஜய்க்கு வேண்டாம் இங்கேயும் ஒரு துடிப்பான இளைஞர் இருக்கிறார் என்று கொள்ளும் அளவுக்கு தமிழகம் முழுவதும் அறிந்த ‘ப்ராமிஸிங் யூத் கேண்டிடேட்’ அதிமுகவில் இல்லை. அதனால் அதிமுக அதிருப்தி இளைஞர்கள், தவெக பக்கம் சென்றிருக்கலாம் என்றும் கணிக்கின்றனர்.

சினிமா மோகமாக இருந்தாலும், அரசியல் அறிவற்றவர்களாக இருந்தாலும் ஒரு குடிமகனின் அடிப்படைக் கடமையான வாக்குரிமையை செயல்படுத்தும் உந்துதலை விஜய்யின் வருகை தந்துள்ளது. அதுவே, இளைஞர்களின் வாக்களிப்பு அதிகமாக இருந்ததற்கும் காரணம் என்பதை முற்றிலுமாக புறந்தள்ளிவிடமுடியாது என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் கூறுகிறார். இதை இத்தோடு விட்டுவிடாமல் திராவிடக் கட்சிகள் இளைஞர்களை, இளம் முகங்கள் மூலம் அரசியல்மயமாக்குவதை ஒரு பயிற்சி போல் செயல்படுத்த வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இல்லையேல், கல்வியில் முன்னேறிய மாநிலம் என்று மார்தட்டிக் கொள்ளும் மாநிலத்தில்தான் இளைஞர்கள் கண்மூடித்தனமாக ஹீரோ ஒர்ஷிப் செய்கிறார்கள் என்பது இழுக்கு. அப்படியொரு ‘கல்ட்’ உருவாவது ஆபத்து. அவர்கள்தான் மாற்றத்தை ஏற்படுத்துகிறோம் என்று வாக்குகளை சிதறடிப்பர் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தேர்தல் முடிவை எழுதும் பெண் சக்தி:

தேர்தல் முடிவை எழுதும் அதிகாரம் பெண் சக்தி வசம் வந்துவிட்டது. ஒவ்வொரு தேர்தலிலுமே ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்களே அதிகம் என்ற போக்கு மாறியதில் இருந்தே இந்த அதிகாரம் அவர்களிடம் சென்ற வரலாறு தொடங்கியதாகக் கொள்ளலாம்.

அதனாலேயே மாநிலங்கள் தோறும், தேசிய அளவிலும் பெண்களை முன்வைத்து பல்வேறு திட்ட அறிவிப்புகள் வெளியாகி வருகின்றன. நேற்று மாலை 5 மணி நிலவரப்படி வாக்களித்த பெண் வாக்காளர்கள் சதவீதம் 85.76. ஆண் வாக்காளர்கள் 83.57%.

இந்தத் தேர்தலுக்கு ஆளும் திமுகவும், எதிர்க்கட்சி அதிமுகவும் பெண்களுக்கான வாக்குறுதிகளை வாரி வழங்கின. மகளிர் உரிமைத் தொகையை செல்லுமிடமெல்லாம் விமர்சித்த அதிமுக, இந்தத் தேர்தலில் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.2000 என்று அறிவித்தது. குல விளக்கு திட்டத்தின்கீழ் அனைத்து குடும்பப் பெண்களுக்கும் மாதம் ரூ.2,000 வழங்கப்படும்.

ஒவ்வொரு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா குளிர்சாதனப் பெட்டி வழங்கப்படும் என்று அறிவித்தது.

தவெக ஒருபடி மேலே சென்று 60 வயது வரையிலான அனைத்துப் பெண்களுக்கும் மாதம் ரூ.2,500 என்று அறிவித்தது.

எங்கள் தேர்தல் அறிக்கையே ‘சூப்பர் ஸ்டார்’ என்று திமுக முன்னிலைப்படுத்தி, மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 வழங்கப்படும், பெண்கள் தங்களுக்கு விரும்பிய வீட்டு உபயோகப் பொருளை வாங்கிக் கொள்ள ரூ.8000க்கான டோக்கன் வழங்கப்படும் என்று கூறியது. இந்த டோக்கன் அறிவிப்பு பெண் வாக்காளர்களை ஈர்க்கும் என்பதே திமுகவின் கணிப்பு.

அது களத்தில் வேலை செய்ததால் பெண் வாக்காளர்கள் அதிகம் வாக்களித்தனரா அல்லது விரும்பிய பொருள் என்ற ஆப்ஷன் மீது ஈடுபாடின்றி ’அதிமுக அறிவிப்புகள்’ ஓகே என்று அதற்கு வாக்களித்தார்களா அல்லது இரண்டுமே வேண்டாம் மாற்றம் தான் வேண்டும், அதை நாம் பல காலமாக திரையில் பார்த்து ரசித்த பிரபல சினிமா முகம் தரலாம் அல்லவா? வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்போமா என்று வாக்களித்தார்களா என்பது மே 4 தேர்தல் முடிவு சொல்லும்.

எதுவாக இருந்தாலும் பெண் வாக்காளர்களை கவர்வது, அவர்கள் வாக்குகளை பெறுவது என்பது பிரதானக் கட்சிகள், புதிய கட்சிகளின் வியூகமாக இருந்த நிலையில், அதற்கான பலனாக பெண் வாக்கு சதவீதத்தை கொள்ளலாம்.

பிஹார் தேர்தலுக்கு முன்னர், ‘முதல்வர் மகளிர் வேலைவாய்ப்பு திட்டம்‘ அம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக மாநிலம் முழுவதும் உள்ள 75 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்குகளில் ரூ.10,000 செலுத்தப்பட்டது. மொத்தமாக ரூ.7,500 கோடி பெண்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டது. இத்திட்டத்தில் இணைந்துள்ள பெண்களுக்கு அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை தொடர்ந்து நிதி உதவி அளிக்கப்படும் என பிஹார் அரசு தெரிவித்தது. இது தேர்தலில் சிறப்பாக எதிரொலித்தது. பிஹாரில் ஜேடியு பாஜக வெற்றிக்கு அதுவே வித்திட்டது என ஒட்டுமொத்த ஊடக உலகமும் குறிப்பிட்டது.

இந்நிலையில், பெண் சக்தி தமிழகத்தின் எதிர்காலத்துக்காக எதை தேர்ந்தெடுத்துள்ளது என்பது மே 4 தெரியவரும். அதற்கான முன்னோட்டத்தை மேற்கு வங்க தேர்தல் 2ம் கட்ட வாக்குப்பதிவு முடியும் ஏப்.29ம் தேதி மாலை வெளியாகும் எக்ஸிட் போல்ஸ் ஓரளவுக்கு கட்டியங்கூறும் என எதிர்பார்க்காலம்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளில் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தன்னார்வலர்கள் உதவியுடன் சக்கர நாற்காலியில் வந்து தங்களது வாக்கினை செலுத்தினர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளான நீலகிரி மாவட்டம் 108 உதகை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உதகை தூய இருதய ஆண்டவர் மேல்நிலைப்பள்ளி வாக்குச் சாவடி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர் ஊராட்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பு

மாதவரம், ஏப்.25-

மாதவரம் சட்டமன்ற தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர் ஊராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனது ஜனநாயக கடமையாற்றிய அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் பாமக மாவட்ட தலைவர் சபாபதி, அதிமுக திருவள்ளூர் மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் விஜயகுமார், மூத்த முன்னோடிகள் வெங்கடேசன், ஆறுமுகம், கிளை செயலாளர் பவுன்ராஜ் ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலாஜி,கிளை செயலாளர் கண்ணையன்,பகுதி பிரிதிநிதி குமார் மற்றும் யுவராஜ், பாண்டியன், பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் ஹேமலதா மனோஜ், ஒன்றிய செயற்குழு உறுப்பினர் பத்மாவதி,ஒன்றிய கிளை தலைவர் வெங்கடேசன், செல்வம், சிதம்பரம், மேகநாதன், சரவணன், தசரதன் உள்ளிட்ட தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சி திருவள்ளூர் மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் திவாகர், வில்லிவாக்கம் ஒன்றிய பொறுப்பாளர் தியாகு,சுபா, ரமேஷ், புரட்சிபாரதம் பாண்டியன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

## தேனி மாவட்ட ஆட்சியர் முக்கிய அறிவிப்பு

தேனி ஏப். 25-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் (23.04.2026) வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, 04.05.2026 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 198ஆண்டிப்பட்டி, 199 பெரியகுளம் (தனித்தொகுதி), 200போடிநாயக்கனூர் மற்றும் 201கம்பம் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையமாக தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரி தேர்வு செய்யப்பட்டு, தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. மேற்கண்ட முன்மொழிவை பரிசீலித்த தலைமைத் தேர்தல் ஆணையம், தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியை தேனி மாவட்டத்திற்கான வாக்கு எண்ணிக்கை மையமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. எனவே, தேனி மாவட்டத்தில் எதிர்வரும் 04.05.2026 அன்று கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் காலை 08.00 மணிமுதல் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.




## பம்மல் பகுதியில் உற்சாகமான வாக்குப்பதிவு பல்லாவரம் தொகுதி வேட்பாளர் அனகை முருகேசன் மற்றும் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி வாக்கு பதிவு செய்தார்

பம்மல் ஏப். 25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது வார்டு மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி அவர்கள், பம்மல் காந்தி நகர் பகுதியில் அமைந்துள்ள மணிகண்டன் நர்சரி பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாக்குசாவடியில் தனது வாக்கை பதிவு செய்து ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார். பொதுமக்கள் மத்தியில் உற்சாகமான சூழலில் அவர் வாக்குப்பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.பம்மல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாக்குப்பதிவு



காலை முதலே சுறுசுறுப்பாக நடைபெற்றது பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் வரிசையாக நின்று தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தி வருகின்றனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வாக்குசாவடிகளில் தேவையான அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, பல்லாவரம் தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன் மற்றும் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் பம்மல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு வாக்குசாவடிகளை நேரில் சென்று பார்வையிட்டனர். வாக்குப்பதிவு சீராக நடைபெறுகிறதா, வாக்காளர்களுக்கு எந்தவித சிரமமும் இல்லையா என்பதை ஆய்வு செய்த அவர்கள் பொதுமக்கள் அதிக அளவில் வாக்களிக்க முன்வர வேண்டும் எனவும், அமைதியான மற்றும் நேர்மையான தேர்தல் நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் போலீசாரின் செயல்பாட்டையும் அவர்கள் பாராட்டினர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற்றதையடுத்து, கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில், 55.ஓசூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்பட்ட, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள், வாக்காளர்கள் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் இயந்திரம் ஆகியவற்றினை 55.ஓசூர் (ம) 56.தளி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் பண்வே ராகுல் துக்காராம், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் இன்று (24.04.2026) 55.ஓசூர் சட்டமன்ற தொகுதியின் வாக்கு எண்ணும் மையத்தின் பாதுகாப்பு இருப்பறையில் வைக்கப்பட்டதை பார்வையிட்டனர். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, ஓசூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆக்ரிதி சேத்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.





■ செங்கல்பட்டு நகராட்சி, அனுமந்தபுத்தேரி நகராட்சி ஆரம்பப்பள்ளி வாக்குச்சாவடி மைய எண்.447ல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் .எஸ்.மாலதி ஹெலன், வாக்களித்தார்.

## கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தமிழகத்தின் மின் நுகர்வில் புதிய உச்சம்

சென்னை, ஏப்.25-

கோடை வெயிலின் தாக்கம் காரணமாக, தமிழகத்தின் மின் நுகர்வு 466.16 மில்லியன் யூனிட்கள் என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது.தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது. வெப்பம் அதிகரித்துள்ளால் வீடுகளில் எந்த நேரமும் மின் விசிறிகள் ஓடிக் கொண்டே இருக்கின்றன.

இரவு நேரங்களில் ஏசி பயன்பாடு அதிகரித்துள்ளது. தமிழகத்தின் தினசரி மின்சார தேவை சராசரியாக 16 ஆயிரம் மெகாவாட் என்ற அளவில் இருக்கும். கோடை காலங்களில் 20 ஆயிரம் மெகாவாட்டையும் கடந்து மின் தேவை அதிகரிக்கும்.தமிழகத்தில் கடந்த 2024ம் ஆண்டு மே 2ம் தேதி மின்சார தேவை 20,830 மெகாவாட் பதிவான நிலையில், இந்த ஆண்டு கோடை



காலத்துக்கு முன்பு இதுவே அதிகபட்ச அளவாக இருந்த நிலையில், கடந்த ஏப்.17ம் தேதி 21,010 மெகாவாட் மின் தேவை பதிவாகி புதிய உச்சத்தை எட்டியது.இந்நிலையில், நேற்று முன்தினம் (22ம் தேதி) இதுவரை இல்லாத அளவில் 21,051 மெகாவாட் மின் தேவை பதிவாகியுள்ளது. இதேபோல, மின் நுகர்வு புதிய உச்சத்தை எட்டியுள்ளது.இந்த ஆண்டு கோடைகாலத்துக்கு முன்பாக 2024ம் ஆண்டு ஏப்.30ம் தேதி மின் நுகர்வு 454.32 மில்லியன் யூனிட்களாக இருந்த நிலையில், கடந்த 18ம் தேதி 462.66 மில்லியன் யூனிட்கள் மின் நுகர்வு இருந்தது.தற்போது, இந்த அளவையும் தாண்டி நேற்று முன்தினம் (22ம் தேதி) 466.16 மில்லியன் யூனிட்கள் மின் நுகர்வு பதிவானது. இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், "வழக்கமாக மின்சாரத் தேவை மதிய நேரத்தில் தான் உச்சத்தில் இருக்கும்.ஆனால், இந்த ஆண்டு இரவு நேரங்களில் வெப்பத்தின் தாக்கம் மிக அதிகமாக இருப்பதால், வீடுகளில் ஏசி பயன்பாடு பல மடங்கு அதிகரித்துள்ளது.இதுவே மின் தேவை புதிய உச்சத்தைத் தொட முதன்மையான காரணமாக அமைந்துள்ளது. மேலும், வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் போது 23 ஆயிரம் மெகாவாட் வரை மின் தேவை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்றனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற்றதையடுத்து, கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில், 53.கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்பட்ட, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள், வாக்காளர்கள் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் இயந்திரம் ஆகியவற்றினை 53.கிருஷ்ணகிரி (ம) 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் சௌரவ் பாபு சிங்ஹால், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் இன்று (24.04.2026) 53.கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியின் வாக்கு எண்ணும் மையத்தின் பாதுகாப்பு இருப்பறையில் வைத்து முத்திரையிடப்பட்டது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## மீன் பிடி படகில் ஆபத்தான பயணம்: பக்கிங்ஹாம் கால்வாயை கடந்து வாக்களித்த வாக்காளர்கள்

பொன்னேரி, ஏப்.25-

பொன்னேரி (தனி) தொகுதிக்கு உட்பட்ட பழவேற்காடு அருகே உள்ளது தாங்கல்பெரும்புலம் ஊராட்சி. தாங்கல்பெரும்புலம், எடையன்குளம், கருங்காலி, கோரைக் குப்பம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய இந்த ஊராட்சியில் 2 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர்.இவர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான இரு வாக்கு சாவடிகள், வங்காளவிரிகுடா கடற்கரையையொட்டியுள்ள கோரைக்குப்பம், சத்தான்குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் பல ஆண்டுகளாக இருந்து வந்தன.

இதனால், தாங்கல்



பெரும்புலம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள், மீன் படகில் ஆபத்தான பயணம் மேற்கொண்டு பக்கிங்ஹாம் கால்வாயை கடந்து சென்று, பல ஆண்டுகளாக வாக்களித்து வந்தனர்.இந்நிலையில், சுனாமி காரணமாக சாத்தான்குளம் மீனவ மக்கள், பக்கிங்ஹாம் கால்வாய் அருகே அமைக்கப்பட்ட சுனாமி குடியிருப்புக்கு இடம் மாறினர். இதனால், அப்பகுதியில் ஒரு வாக்கு சாவடி அமைக்கப்பட்டுள்ளது.அதில், சாத்தான்குளம் மீனவ மக்கள் வாக்களித்து வருகின்றனர். அதே நேரத்தில், தாங்கல்பெரும்புலம், எடையன்குளம் கிராமங்களை சேர்ந்த வாக்காளர்கள் பட்டியல், கோரைக் குப்பம் வாக்குச் சாவடியில் இணைக்கப்பட்டது.

இதனால், இவ்விரு கிராம மக்கள் 10 கிமீ தூரம் சுற்றி கோரைக் குப்பம் வாக்குச் சாவடியில் வாக்களிக்கும் நிலை கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கிறது.

ஆகவே, சாத்தான்குளம் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியில் தாங்கல்பெரும்புலம், எடையன்குளம் மக்களுக்காக வாக்குச் சாவடி அமைக்க வேண்டும் என, தொடர்ந்த கோரிக்கை வைத்தும் பலனில்லை.இந்நிலையில், நீண்ட தூரம் சுற்றி கோரைக்குப்பம் வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிப்பதை தவிர்க்கும் விதமாக தாங்கல்பெரும்புலம் கிராம மக்கள் மீன் பிடி படகில் ஆபத்தான பயணம் மேற்கொண்டு வாக்களித்து வருவதும், எடையன்குளம் கிராம மக்கள் சுமார் 7 கிமீ தூரம் டிராக்டர் மூலம் பயணித்து வாக்களித்து வருவதும் தொடர் கதையாக உள்ளது.தாங்கல்பெரும்புலம் கிராமத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நேற்று மீன்பிடி படகில் ஆபத்தான பயணம் மேற்கொண்டு பக்கிங்ஹாம் கால்வாயை கடந்து சென்று, கோரைக்குப்பம் வாக்குச் சாவடியில் வாக்களித்தனர். தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது

# வாக்களித்ததை வீடியோ எடுத்து வெளியிட்ட தவெக நிர்வாகி கைது

திருப்பத்தூர், ஏப்.25-

திருப்பத்தூர் தொகுதியில் வாக்களித்ததை செல்போனில் வீடியோ எடுத்து அதை சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்த தவெக நிர்வாகியை போலீஸார் நேற்று கைது செய்தனர்.திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த குனிச்சி பகுதியைச் சேர்ந்தவர் ஓட்டுநர் சக்திவேல் (30). இவர், சமீபத்தில் தவெகவில் இணைந்து அக்கட்சி சார்பில் போட்டியிடும் தவெக வேட்பாளர் மருத்துவர் திருப்பதியுடன் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.



இந்நிலையில், குனிச்சி அரசு மேல்நிலை பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு சாவடி மையத்துக்கு சக்திவேல் நேற்று காலை தனது வாக்கினை செலுத்த சென்றார்.அப்போது, அங்கு வாக்காளர்கள் செல்போன்களை வாக்கு பதிவு மையத்துக்குள் எடுத்து செல்லக்கூடாது என தேர்தல் அதிகாரிகள் விதித்த கட்டுப்பாட்டை மீறி சக்திவேல் தன்னுடைய செல்போனை மறைத்து வாக்கு பதிவு மையத்துக்குள் எடுத்துச்சென்றுள்ளார்.அங்கு தவெக வேட்பாளருக்கு விசில் சின்னத்தில் பொத்தானை அழுத்தி, விவிபாட் இயந்திரத்தில் வந்த ஒப்புகைச் சீட்டை வீடியோ எடுத்து அதை சமூகவலைதளங்களில் பதிவேற்றம் செய்தார்.இந்த வீடியோ வைரலானது. விதிகளை மீறிய சக்திவேல் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை எழுந்தது. இதன்பேரில் கந்திலி போலீஸார் வழக்குப் பதிந்து அவரை கைது செய்தனர்

# 7 மணி நேர பயணம் செய்து வாக்களித்த மருத்துவர் ராகுல் - ஜனநாயக கடமைக்கு முன்னுரிமை

கிருஷ்ணகிரி, ஏப்.25-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டின த்தைச் சேர்ந்த மருத்துவர் ராகுல் மற்றும் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தைச் சேர்ந்த மருத்துவர் தீப்தி ஆகியோரின் திருமணம் இன்று காலை சிதம்பரத்தில் சிறப்பாக நடைபெற்றது. குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமண நிகழ்ச்சி நிறைவடைந்ததும், தனது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் மருத்துவர் ராகுல் உடனடியாக பயணமானார். சிதம்பரத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் வரை சுமார் 7 மணி நேரம் கார் மூலம் பயணம் செய்து, ஊராட்சி



ஒன்றிய துவக்கப்பள்ளி ஒன்றாவது வார்டில் தனது வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களித்தார்.திருமண நாளிலேயே இவ்வாறு நீண்ட தூரம் பயணம் செய்து வாக்களித்தது, அவரது ஜனநாயகப் பொறுப்புணர்வை வெளிப்படு த்துகிறது. "எவ்வளவு முக்கியமான தனிப்பட்ட நிகழ்வு இருந்தாலும், வாக்களிப்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை கடமை" என்ற கருத்தை அவர் தனது செயலின் மூலம் எடுத்துக்க ாட்டியுள்ளார்.

மருத்துவர் ராகுலின் இந்த செயல், பொதுமக்கள் மத்தியில் வாக்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பாராட்டுகளை பெற்று வருகிறது. திருமண நாளிலேயே வாக்களிக்க முன்னுரிமை அளித்த அவரின் செயல், இளைஞர்க ளுக்கும் ம ற்ற வாக்காளர்களுக்கும் ஒரு நல்ல முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

# துர்கா ஸ்டாலினிடம் நலம் விசாரித்த தமிழிசை: பொதுமக்களை வெகுவாக கவர்ந்த அரசியல் நாகரீகம்

சென்னை, ஏப்.25-

சென்னை ஆழ்வார் பேட்டை வாக்குச்சாவடியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மனைவி துர்கா ஸ்டாலினிடம் பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தர ராஜன் நலம் விசாரித்தார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி, தமிழகம் முழுவதும் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. ஆழ்வார்ப்பேட்டை, எஸ்ஐஇடி கல்லூரியில், தமிழக முதல்வர் ஸ்டாலின், மனைவி துர்கா ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, அவருடைய மனைவி கிருத்திகா, மகன் இன்பநிதி ஆகியோர் வருகை தந்தனர். வரிசையில் நின்று அவர்கள் அனைவரும் தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.அதன் பின்னர்,



வெளியே வந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துர்கா ஸ்டாலினை பாஜக வேட்பாளரும், தெலுங்கானா ஆளுநரமான தமிழிசை சவுந்தரராஜன் நேருக்குநேர் சந்தித்தார். அப்போது, தமிழிசை சவுந்தரராஜன், "அண்ணன் வணக்கம்" என்றார். இதையடுத்து, "நலமாக இருக்கிறீங்களா" என்று முதல்வர் நலம் விசாரித்தார். தொடர்ந்து, ''வாழ்த்துக்கள்'' என முதல்வர் தெரிவித்தார். தொடர்ந்து, துர்கா ஸ்டாலினிடம் தமிழிசை சவுந்தர ராஜன் நலம் விசாரித்தார்.

தேர்தல் களம் மற்றும் அரசியல் போட்டிகளைத் தாண்டி, மிகுந்த மரியாதையுடன் முதல்வர் ஸ்டாலினிடம், அவரது மனைவி துர்கா ஸ்டாலினிடம் தமிழிசை சவுந்தரராஜன் நலம் விசாரித்த, அரசியல் நாகரிகம் அங்கிருந்தவர்களையும், பொதுமக்களையும் வெகுவாக கவர்ந்தது.

# மதுரை சித்திரை திருவிழாவுக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

ஆண்டிபட்டி, ஏப்.25-


மதுரை சித்திரை திருவிழாவின் உச்ச நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவத்திற்காக, வைகை அணையிலிருந்து இன்று காலை தண்ணீர் திறந்து விடப்பட்டது.மதுரையில் உலகப் புகழ்பெற்ற சித்திரை பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக வரும் மே 1ஆம் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் லட்சக்கணக்கான பக்தர்கள் திரளுவார்கள் என்பதால், வைகை ஆற்றில் போதுமான தண்ணீர் இருப்பதை உறுதி செய்ய தமிழக அரசு உத்தரவிட்டது.தமிழக அரசின் நீர் வளத்துறை அரசாணையின் படி வைகை அணையிலிருந்து ஏப்ரல் 24 முதல் ஏப்ரல் 29 வரை மொத்தம் 170 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்க அனுமதி வழங்கப்பட்டது.71 அடி கொள்ளளவு கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 33.92 அடியாக உள்ளது. கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்விற்காகவும், மதுரை மாநகரின் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காகவும் இன்று (24.04.2026) காலை 6:00 மணிக்கு முதற்கட்டமாக விநாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையிலிருந்து சீறிப்பாயும் இந்தத் தண்ணீர் இணைப்பு கால்வாய் வழியாக வைகை ஆற்றைச் சென்றடையும்.

திறக்கப்பட்ட நீரானது தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்டங்கள் வழியாகப் பாயும். எனவே, கால்வாய் மற்றும் ஆற்றுப் பகுதிகளில் பொதுமக்கள் யாரும் இறங்கவோ, குளிக்கவோ அல்லது கால்நடைகளை அழைத்துச் செல்லவோ வேண்டாம் என வைகை அணை உதவி செயற்பொறியாளர் அலுவலகம் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# லெபனான் இஸ்ரேல் போர் நிறுத்தம் 3 வாரங்களுக்கு நீட்டிப்பு : ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப்.25-

லெபனான் இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த நிலையில், அதனை மேலும் மூன்று வாரங்களுக்கு நீட்டித்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப்.28ம் தேதி தாக்குதலை தொடங்கியதை அடுத்து, ஈரான் ஆதரவுபெற்ற ஆயுதக் குழுவான லெபனானின் ஹிஸ்புல்லா இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, ஈரானுக்கு எதிரான தாக்குதலை நடத்திக் கொண்டே லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதலை தொடர்ந்தது. இதில், ஹிஸ்புல்லா தலைவர்கள் பலர் உயிரிழந்ததோடு, லெபனான் பொருளாதார



ரீதியாகவும் கடும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்நிலையில், லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே கடந்த வாரம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டது. அமெரிக்காவில் உள்ள லெபனான் மற்றும் இஸ்ரேல் தூதர்கள் இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்து இந்த போர் நிறுத்தம் ஏற்பட்டது.இந்தப் போர் நிறுத்தம் கடந்த ஞாயிற்றுக்கிழமையோடு முடிவுக்கு வந்த நிலையில், அதனை மேலும் நீட்டிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வாஷிங்டன் டி.சி.யில் அதிபர் டொனால்டு ட்ரம்ப் தலைமையில் நேற்று (ஏப்.23) நடைபெற்றது.

இதில், துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதர் மைக் ஹக்கபீ, லெபனானுக்கான அமெரிக்க தூதர் மைக்கேல் இசா, அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதர் யெச்சியல் லீட்டர், அமெரிக்காவுக்கான லெபனான் தூதர் நாடா மோவாட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். டொனால்டு ட்ரம்ப்பின் ஓவல் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய டொனால்டு ட்ரம்ப், "போர் நிறுத்தம் மூன்று வார காலத்துக்கு நீட்டிக்கப்படுகிறது. இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் லெபனான் அதிபர் ஜோசப் அவுன் ஆகியோரை விரைவில் வெள்ளை மாளிகையில் வரவேற்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். ஹிஸ்புல்லாவிடம் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள லெபனானுக்கு உதவ அமெரிக்கா அதனுடன் இணைந்து செயல்படும்" என தெரிவித்தார்.இந்தப் பேச்சுவார்த்தையில் ஹிஸ்புல்லா பங்கேற்கவில்லை. கூட்டத்தில் பேசிய அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதர் யெச்சியல் லீட்டர், ஹிஸ்புல்லாவுக்கு எதிராகவும், ஈரான் புரட்சிகர காவல் படைக்கு எதிராகவும் மென்மையாக செயல்படுவது, நமது பரஸ்பர இலக்கை அடைவதற்கான செயல்முறையை சாத்தியமற்றதாகவே மாற்றும் என தெரிவித்தார்.

# லெபனான் இஸ்ரேல் இடையே அமெரிக்காவில் நேரடி பேச்சுவார்த்தை

பெய்ரூட், ஏப்.25-

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினரிடையே உள்ள தற்காலிகப் போர் நிறுத்தத்தை மேலும் நீட்டிப்பது தொடர்பாக, லெபனான் மற்றும் இஸ்ரேல் நாடுகளின் பிரதிநிதிகள் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றனர்.

நீண்ட காலமாக பகைமை பாராட்டி வரும் இரு நாடுகளுக்கு இடையே, கடந்த 3 தசாப்தங்களில் இல்லாத வகையில் இத்தகைய நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறுவது இது 2வது முறையாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமலுக்கு வந்த 10 நாள் தற்காலிகப் போர் நிறுத்தத்தை நீட்டிப்பது குறித்து இரு நாடுகளும் ஆலோசிக்க உள்ளன. இதுதொடர்பாக லெபனான் அதிபர் ஜோசப் அவ்ன் கூறுகையில், "அமெரிக்காவுக்கான லெபனான் தூதர் நடா



ஹமாதே முவாத் மற்றும் இஸ்ரேல் தூதர் யெச்சியேல் லைட்டர் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர்.

ஆக்கிரமிப்பு, இடிப்பு... போர் நிறுத்தத்தை நீட்டிக்கவும், எல்லையோர கிராமங்களில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு மற்றும் இடிப்பு நடவடிக்கைகளை நிறுத்தவும் லெபனான் தரப்பில் வலியுறுத்தப்படும்" என்றார். இஸ்ரேலியப் படைகள் லெபனானில் இருந்து முழுமையாக வெளியேறுதல், சிறைபிடிக்கப்பட்ட லெபனான் கைதிகளை விடுவித்தல் மற்றும் எல்லையில் லெபனான் ராணுவத்தை நிலை நிறுத்துதல் போன்ற கோரிக்கைகளும் இந்த பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

இதற்கிடையே, இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் கிதியோன் சார் பேசுகையில், "லெபனான் அரசுக்கும் எங்களுக்கும் பெரிய அளவில் எல்லை பிரச்சினைகள் ஏதுமில்லை. ஆனால், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பே அமைதிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. அந்த அமைப்பை நிராயுதபாணியாக்க லெபனான் அரசு முன்வர வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

# தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.27 வரை 5 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

சென்னை, ஏப்.25-

தமிழக உள் மாவட்டங்களில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், கிழக்கு விதர்பா முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில், நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.25) முதல் ஏப்.27ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், 28ம் தேதி ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 29, 30 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் 2 செமீ, கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு பெருஞ்சாணி அணை, புத்தன் அணை, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளரின் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு மூடி முத்திரையிடும் பணிகள்

தேனி ஏப்.25-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத்தொகுதிகளில் உள்ள 1395 வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்குப்பதிவில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையமான தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளரின் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு மூடி முத்திரையிடும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்டஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் தலைமையில், பொதுப்பார்வையாளர்கள் .பீம் சிங், வினய் பிரதாப் சிங், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் கால அட்டவனை 15.03.2026 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக நேற்று 23.4.2026. தேர்தல் நடைபெற்றுள்ளது. மேலும், 4 சட்டமன்றத்



தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை வருகின்ற 04.05.2026 அன்று நடைபெற உள்ளது. அதன்படி, நடைபெற்று முடிந்த தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலில் தேனி மாவட்டத்தில் 198.ஆண்டிபட்டி தொகுதியில் 83.68% வாக்குகள், 199. பெரியகுளம் தொகுதியில் 78.51% வாக்குகள், 200.போடிநாயக்கனூர் தொகுதியில் 82.87% வாக்குகள், 201.கம்பம் தொகுதியில் 81.23% வாக்குகள் என மொத்தம் 81.55% வாக்குகள் பதிவாகியுள்ளது.

தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு சுமூகமான முறையில் நிறைவுபெற்றது. வாக்குப்பதிவில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், வாக்காளர் சரிபார்ப்பு இயந்திரங்கள் (VVPAT) ஆகியன வாக்கு எண்ணும் மையத்திற்கு மத்திய பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கொண்டு வரப்பட்டது.


வாக்கு எண்ணும் மையமான தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட உள்ளது.

இக்கண்காணிப்புப் பணிகளில் 21 எண்ணிக்கையிலான துணை இராணுவ படையினர் மூலமாக உள்ளேயும், 40 எண்ணிக்கையிலான தமிழக சிறப்பு ஆயுதப்படை காவலர்கள் மற்றும் 150 எண்ணிக்கையிலான உள்ளூர் காவலர்கள் மேலும், வெடிபொருள் கண்டறியும் கையடக்கக் கருவிகளுடன் 15 காவலர்கள், 11 நபர்கள் கொண்ட 3 அதிரடிப்படைக் குழுக்கள் மற்றும் 12 தீயணைப்பு வீரர்களைக் கொண்ட 2 மீட்புக்குழுக்கள் ஆகியோர் இப்பாதுகாப்பு பணிகளை சுழற்சி முறையில் மேற்கொள்ள உள்ளனர்.

வாக்கு எண்ணும் மையத்தில் அந்தந்த தொகுதிக்காக அமைக்கப்பட்டுள்ள வரவேற்பு மையங்களில் வரப்பெற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்த தகவல்கள் கணினியில் பதிவு செய்யப்பட்ட பின்பே, பாதுகாப்பு வைப்பறையில் வைக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தொகுதி வாரியாக வரப்பெற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், வாக்காளர் சரிபார்ப்பு இயந்திரங்கள் ஆகியன முறையாக, பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் ஆகியோர் தலைமையில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்புடன் மூடி முத்திரையிடப்பட்டது

இந்நிகழ்வில்மாவட்டவருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர்.ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர் கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .சையத் முகைதீன் இப்ராஹிம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.ராமகிருஷ்ணன் (பொது), காசி (தேர்தல்), கதிர்வேல் (நிலம்), வட்டாட்சியர் (தேர்தல்)சுருளி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி பிரதிநிதிகள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்டத்தில் 15 வேலம்பாளையம் ஏப்ரல் 23 அன்று உயர்நிலைப் பள்ளியிலும். நடுநிலைப் பள்ளியிலும். பொதுமக்கள் அனைவரும் சென்று ஓட்டு போட வசதியாக ஏற்பாடு செய்யப்பட்டது. அனைத்து கட்சியினரும் பூத் கமிட்டி அமைக்கப்பட்டு. மக்கள் போடும் ஓட்டுக்கள் அனைத்தும் முறையாக போடப்பட்டதா என. பூத் கமிட்டி உறுப்பினர்களால் கண்காணிக்கப்பட்டது. மேலும் ஆ இ அ தி மு க. வேட்பாளர் எம் எஸ் எம் ஆனந்தன் அவருக்கு ஆதரவாக. வேலம்பாளையம் அ தி மு க. தலைவர் மணி அவர் பூத்து கமிட்டிகளில் எப்படி வேலை நடக்கிறது எனவும் மக்கள் ஓட்டு போடுவதையும் நேரிடையாக சென்று கண்காணித்து வந்தார் மேலும் அதிமுக மக்கள் அனைவரும். தங்களது பூத்துகளில் வேலை செய்பவர்களை சென்று நேரில் எல்லோரும் உணவு அருந்தினீர்களா என விசாரித்து அதிமுக மக்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தினார். மேலும் இப்ப பகுதியில் நடத்தப்பட்ட தேர்தலில். எந்த குழப்பமும் ,எந்த அசம்பாவிதமும், இல்லாமல். அமைதியாக நடைபெற்றது.

# மானாமதுரையில் தாகம் தணிக்கும் பசுமை செயல் குழு: 13வது நாளாக மோர் வழங்கும் மனிதநேய சேவை

மானாமதுரை, ஏப்.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களின் தாகம் தணிக்க பசுமை செயல் குழு சார்பில் தொடர்ந்து 13 வது நாளாக மோர் வழங்கும் சேவை நடைபெற்றது. மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் கோயில் அருகே, வைகையாற்றுக்கு செல்லும் பாதையில் நடைபெற்ற இந்த




முகாமில், கடும் வெயிலால் அவதிப்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனங்களில் சென்ற பொதுமக்கள் மோர் பருகி பயனடைந்தனர்.கத்திரி வெயில் தொடங்கும் முன்பே வெப்பம் அதிகரித்துள்ளதால், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த மனிதநேய பணியை பசுமை செயல் குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர். தொடர்ந்து 13நாட்களாக நடைபெற்று வரும் இந்த மோர் வழங்கும் சேவைக்கு மானாமதுரை மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பொதுமக்களின் நலனை முன்னிறுத்தி செயல்படும் பசுமை செயல் குழுவினரின் இந்த சேவை பாராட்டுக்குரியது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் நேற்று முன்தினம் தனது வாக்கினை பதிவு செய்தார்

சிவகங்கை, ஏப்.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள சங்க மங்கலம் ஊராட்சிஒன்றிய தொடக்கப் பள்ளியில், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் நேற்று முன்தினம்தனது வாக்கினை பதிவு செய்தார். வாக்குப்பதி விற்காக காலை முதலே வாக்குச்சாவடிக்கு வந்த அவர், பொதுமக்களுடன் வரிசையில் நின்று ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



பின்னர் செய்திய ாளர்களிடம் பேசிய அவர், "மக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

தமிழரசி ரவிக்குமார் கடந்த மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் வாக்களிப்பு அப்பகுதி திமுக நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. வாக்குச்சாவடியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்ப டுத்தப்பட்டிருந்ததுடன், தேர்தல் அதிகாரிகள் மேற் பார்வையில் அமைதியான முறையில் வாக் கு ப்பதிவு நடைபெற்றது.



■ சிவகங்கை மாவட்டத்தில் 4 சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு பணிகள், நேற்றைய முன்தினம் (23.04.2026) நிறைவு பெற்றுள்ளதையொட்டி, காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில், அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கான வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு, சீல் இடும் பணிகள் தொடர்பாக, 184 காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் சீல் இடும் பணிகள் நேற்று (24.04.2026), மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி, மற்றும் பொது பார்வையாளர் ஷாமா பர்வின், (184 காரைக்குடி மற்றும் 185 திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிகள்) ஆகியோர் தலைமையில், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. உடன் காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத், மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், (184 காரைக்குடி சட்டமன்றத் தொகுதி) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், அரசு அலுவலர்கள், காவல்துறையினர் உட்பட பலர் உள்ளனர்.

# தேனி மாவட்ட அனைத்து பத்திரிக்கையாளர் சார்பில் நன்றி

தேனி: ஏப். 25-

தேனி மாவட்டம் மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் கி.எடிசன் தேனி மாவட்ட செய்தி தொடர்பு துறை அதிகாரியாக தென்காசி மாவட்டத்தில் இருந்து தேனி மாவட்டத்திற்கு இரண்டு மாதங்கள் ஆகியயுல்ல இந்நிலையில் ஏ.எடிசன் தேனி மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து பத்திரிகையாளர்களின் நீங்கா இடம் பிடித்தவராக இருக்கிறார் மற்றும் தேனி மாவட்ட அணைத்து செய்தியாளர் சந்திப்பில் நல்லா வழிகாட்டியாக இருந்து வரும் அவர் நல்ல சிந்தனையாளர். நல்லாற்றலுடையவராக எங்கள் மனதை நீங்க இடம் பிடித்தவராக இருக்கிறார் என்பதனை எங்கள் தேனி மாவட்ட அனைத்து பத்திரிக்கையாளர் சார்பில் நாங்கள் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.





■ இராமநாதபுரம் அண்ணா பொறியியல் கல்லூரியில் நேற்று (24.04.2026) 211இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான வாக்குப்பதிவு முடிவுற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைத்து சீல் வைக்கும் பணி தேர்தல் பார்வையாளர் திரு.ஓம் பிரகாஷ். (இராமநாதபுரம்) அவர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ். இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் செ.ஹபிபூர் ரஹ்மான் வேட்பாளர்கள் மற்றும் பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம் 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்குப்பதிவில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையமான தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் நேற்று (24.04.2026) வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளரின் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு மூடி முத்திரையிடும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்டஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தலைமையில், பொதுப்பார்வையாளர்கள் .பீம் சிங், வினய் பிரதாப் சிங், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



■ தமிழ்நாடு சட்டமன்றத் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, நேற்று முன்தினம் (23.04.2026) நடைபெறும் வாக்குப்பதிவில், சிவகங்கை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி, மற்றும் தனது மகள்களுடன் சிவகங்கை மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாக வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்தார்..



■ விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்2026 (23.04.2026) அன்று நிறைவடைந்ததை முன்னிட்டு, மாவட்டத்தின் 7சட்டமன்றத் தொகுதிகளில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் (BU), கட்டுப்பாட்டு இயந்திரங்கள்(சிஹி), விவிபேட் இயந்திரங்களை (VVPAT) பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ச.வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் மாவட்டத் தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், தேர்தல் பொது பார்வையாளர்கள் மற்றும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் வைக்கப்பட்டு சீல் செய்யப்பட்டது.

# பரந்தூர் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த ஏகனாபுரம் மக்கள் வாக்களிப்பு

காஞ்சிபுரம், ஏப்.25-

பரந்தூர் விமான நிலையத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்த ஏகனாபுரம் மக்கள் இந்த முறை ஆர்வமுடன் வாக்களித்தனர்.இந்தக் கிராமத்தில் வாக்குப்பதிவு தொடங்கிய 2 மணி நேரத்தில் 25 சதவீத வாக்குகள் பதிவானது குறிப்பிடத்தக்கது. சென்னைக்கு இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள 5,746 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த அரசு முடிவு செய்தது.



இதற்கு ஆரம்பம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வரும் ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராம மக்கள், நிலம் மற்றும் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் இத்திட்டத்தை ரத்து செய்யக் கோரி 1,300 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.கடந்த மக்களவைத் தேர்தலின் போது, தங்கள் கோரிக்கைகள் செவி சாய்க்கப் படாததைக் கண்டித்து ஏகனாபுரம் மக்கள் ஒட்டு மொத்தமாகத் தேர்தலைப் புறக்கணித்தனர்.ஒரு சில அரசு ஊழியர்களைத் தவிர, ஊரே மொத்தமாக வாக்களிக்காமல் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இருப்பினும், தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலில் போராட்டக் குழுவினர் புதிய முடிவை அறிவித்தனர்.'ஜனநாயக ரீதியாக எங்களின் உரிமைகளை நிலைநாட்டவும், எங்களுடன் யார் துணை நிற்கிறார்களோ அவர்களுக்கு ஆதரவளிக்கவும் வாக்களிக்கப் போகிறோம்' என அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தனர்.அதன்படி, நேற்று காலை வாக்குப் பதிவு தொடங்கியவுடன் மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். காலை 9 மணி அளவிலேயே 25 % வாக்குகள் பதிவாகி இருந்தன.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் பிரபல தனியார் பள்ளியில், மாணவர்களுக்குத் தொடர்ந்து கூடுதல் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவதால் மாணவர்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மாணவர்களின் நலன் கருதி மாவட்ட ஆட்சியர் மற்றும் கல்வி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஜப்பான் காட்டு தீ

# 1100க்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலப்பரப்பு தீயில் நாசம் 2,500 குடியிருப்பாளர்கள் வெளியேற்றம்

ஜப்பான், ஏப்.25-

ஜப்பானின் Iwate மாகாணத்தில் ஏற்பட்ட காட்டு தீ வேகமாக பரவி Otsuchi நகரை நோக்கி பரவி வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதன் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் 2500க்கும் மேற்பட்ட மக்களை பத்திரமாக வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

கடந்த புதன்கிழமை எரிய துவங்கிய இந்த காட்டு தீ, பல இடங்களுக்கு பரவியதால் தீயை கட்டுக்குள் கொண்டு வர அந்த நாடு தீயணைப்பு துறையினர் திணறி வருகின்றனர். இருப்பினும் தரை மற்றும் வான்வழி மூலம் கொளுந்து விட்டு எரியும் காட்டு தீயை அணைக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வரும் சூழலில், இதுவரை 1100க்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலப்பரப்பு மற்றும் 8 கட்டிடங்கள் சேதமடைந்து உள்ளன.

தீ தணியும் அறிகுறிகள் தென்படாததால், அப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களை தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு அதிகாரிகள் கேட்டு கொண்டுள்ளனர். கடந்த ஏப்ரல் 22 முதல் இப்பகுதியில் பரவி வரும் தீயைக் கட்டுப்படுத்த, நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்களும் விமானங்களும் களமிறக்கப்பட்டுள்ளன. Otsuchiயில் எடுக்கப்பட்ட ட்ரோன் வீடியோ காட்சிகள், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி காட்டு தீ தீப்பிழம்புகள் நெருங்குவதையும், அருகிலுள்ள காடுகளிலிருந்து அடர்த்தியான புகை சூழ்வதையும் காட்டுகின்றன. காட்டுத் தீயின் கோரமுகம் தீவிரமாக இருப்பினும், இதுவரை எந்த உயிரிழப்புகளோ அல்லது காயங்களோ பதிவாகவில்லை.

அறிக்கைகளின்படி, ஜப்பானில் இந்த காட்டுத்தீயின் தீவிரத்திற்கு வறண்ட குளிர்கால நிலைமைகளே ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. கடந்த ஆண்டு தொடக்கத்தில் இவாத்தே மாகாணத்தின் ஒ்ஃபுனாட்டோ நகரில் ஏற்பட்ட தீ, கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான தீ விபத்துகளில் ஒன்றாக இருந்தது. தற்போது புதிதாக ஏற்படும் காட்டு தீ சார்ந்த விபத்துகளும் அதன் தீவிரத்திற்கு இணையாக உள்ளன. பலத்த காற்று தொடர்ந்து தீப்பிழம்புகளை அதிகப்படுத்தி வருவதால் தீயை அணைக்கும் பணிகள் மேலும் சவாலானதாக மாறியுள்ளன

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161